858

உ

தேவிசகாயம்

தீபாவளி புதுமைச் சிந்து.

நா, கதிர்வேல்பிள்ளை அவர்களால்
இயற்றியதை
திருச்சி D. S. பிள்ளை அவர்களால்
திருச்சிறுப்பள்ளி
கணபதி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1925 [பைசா 6

O- 1MKV3,J
H25
148508

உ

தேவிசகாயம்

புரட்டாசிமாதத்தில் பிரண்டுவந்த

தீபாவளி புதுமைச் சிந்து.

* * *

விருத்தம்

சப்பானீ பிள்ளையாரே சலாமாலேக்கூட் னைட்
ஒப்பான தண்டம்ரண்டி ஒரு கும்பிடுட்டேனெங்கி
தப்பாதிப்பாவென்று ததிங்கிணம் போடப்பட்ட
பப்பாவாம் விநாயகனை படித்தவர் வாழியாமே

சந்தனதேவன் தெம்மாங்குமெட்டு.

தீபாவளியதிசியத்தை சொல்லவுந்தான் கேள்மானே—யிந்த

குரோதன வருடத்திலே குணமுள்ளமா மயிலே
புரட்டாசி மாதத்திலே பிரண்டுவந்த சேதிகேளு

அருமையுள்ள கண்மணியே ஆரணங்கேதீபாவளி
புரட்டாசிமாதமென்று பஞ்சாங்கத்தினுள்ளதடி

நரகாசூரனைதான் நலமுடனே கொன்றதினால்
எர்பட்டுவந்ததென்று யெல்லோருக்குத்தெரியுமடி

இல்லாத மாதத்திலே இருந்துதடி தீபாவளி
கலியுகத்தின் புதுமைதன்னை கண்மணியே நீயும்பாராய்

ஆற்காடு பஞ்சாங்கமாம் அருமையுள்ள கஞ்சனூரு
புரட்டாசிமாதமென்று பார்த்திருந்தார் ஜனங்களெல்லாம்

புதுக்கோட்டை பஞ்சாங்கமா பிரிமுள்ள இருபத்தெட்டு
புத்தியுள்ள டைரியெல்லாம் புரட்டாசிமாதமென்றே

எத்தனையோ பஞ்சாங்கத்தில் இருந்ததொருதேதிதன்னை
அத்தனையும் பொய்யென்று அடித்திட்டாராம் பேப்பரிலே

பிரட்டுருட்டா பஞ்சாங்கம் பேப்பருந்தான்மெய்யாச்சோ
ஆருமேதான்நம்பவில்லை அப்பிசையில் இருக்கமாட்டார்

தீபாவளிவருருந்தேதி சொல்லிவர்ரேன் கேள்மயிலே
நவராத்திரி கொலுவும்போது நரகாசூரன்மடிந்ததினால்

மடிந்தவாரம் ரெண்டிலேதான் மற்றவர்கள் கருமமாக
விடியுமுன்னே தலைமுழ்க விதித்திட்டாரே பஞ்சாங்கத்தில்

இப்படியாய் பஞ்சாங்கம் இருக்கையிலே மற்றுஞ்சிலர்
அப்பிசைமாதமென்று அடித்திட்டர்றாம் நோட்டிஸிலே

எரு மாறாக நோட்டிஸை எல்லோருக்கும் தந்துவிட்டு
புரட்டாசியிலிருந்தவருக்கு பிள்ளைகுட்டிநாசமென்றார்

புரட்டாசிமாதத்திலே பிரியமுள்ளபண்டிகையை
ஆரும்செய்யகூடாதென்று அடித்திட்டாரேநோட்டீஸிலே

புரட்டாசிபண்டிகையை பிரிமுடன் நிறுத்தும்படி
நற்புத்தியில்லாமலே நாட்டினாரே போர்டொன்று

நோட்டீஸடித்தவரை நெருங்கியேதான் கேள்வியொன்று
கிட்டிவந்துகேழ்தும்போது காணாமலாயோடுவது

எப்பவுமேஇவ்வூரில் ஏட்டாபோட்டி செய்வதுண்டு
தப்பாகசெய்துவிட்டு இப்போதலைகுனிந்துநிற்குறாரே

பேர்கெடவேசெய்துவிட்டு பேப்பருந்தானடித்துவிட்டு
பார்த்தவர்கள்திட்டுறாரும் பவுசிரங்கிபோகும்படி

நம்பாமல்நோட்டிசைதான் நாட்டிலுள்ளஜனங்களெல்லாம்
பஞ்சாங்கவிதிப்படியே புரட்டாசியிலிருந்துவிட்டார்

பித்தலாட்டமதிகமாச்சு பொய்பேச்சுமிகுதியாச்சு
உத்தமியே மோசடிகள் ஊரிலெதான்பெருத்துபோச்சே

அப்பிசை மாதத்திலே அடிக்குது பார் கோடைவெயில்
எப்பவுமேசண்டதில்லை இவ்வருடபஞ்சமது

தெய்வசிந்தைமரவாமலே தீங்கெதுவும் புரியாமலே
வையகத்திலிருந்தவர்கள் வாழ்ந்திருப்பாரென்னாளுமே

இந்தியா தேசத்திலே இருக்குமந்த நேசர்களே
வந்தனமுசெய்துவிட்டேன்வருத்தமது கொள்ளவேண்டாம்

மன்னர்புகழ் திரிசைநகர் பூயிலஞ்சந்தைவீதியிலே
அன்பன் கதிர்வேலன் அதிசியத்தைப்பாடிவிட்டான்

எலக்டிரிக் பவருள்ள

சிறுமலை வாழைப்பழ எஸன்ஸ்

உஙகளுடைய திரேகசூட்டையும் அல்லது மூலக் கொதிடடையும் நீக்கிக்கொள்ள நீங்கள் விரும்பினால் சிறுமலை வாழைப்பழ திருவாத்தை இரவு நேரங்களில் பாலில் 6 துளி விட்டும் பகல் நேரங்களில் ஜலத்தில் கொஞ்சம் சீனியிட்டு சிறுமலை வாழைப்பழ திருகத்தில் 3 துளி விட்டு சாப்பிட்டுவந்தால் எவ்விதமான சூட்டையும் போக்கி ரெத்தவிருத்தியை உண்டுபண்ணும் நரப்புகளுக்கு முருக்கேற்றி வலுவையுண்டாக்கும்.

இந்த திருவகத்தை 15 தினம் வரையில் விடாமல் சாப்பிட்டால் தனிபடுக்கையில் நீங்கள் இருக்க முடியாதென்றால் இந்த திருவகத்தின் மகிமையை நீங்களே தெரிந்துகொள்ளலாம். விலை ரூபா 1

ஜோக்கர் அண்கோ கிளாக்டவர் திருச்சி

MADRAS

டைப் பவுண்ட்ரி பிராட்வே,

இந்த கம்பெனியில் தயாராகும் இங்கிலீஸ் தமிழ் எழுத்துக்கள் உறுதியாகவும் நாள்பட உழைக்ககூடியதாகவும் இருக்கின்றது ஆதலால் ஒவ்வொரு அச்சாபீஸ் தலைவரும் கேட்லாக்கு எழுதவும்.